## கரூர் கொடுந்துயரச் சம்பவ வழக்கு:

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிகப் பணி மட்டுமே வழங்க வேண்டும் !

## த.வெ.க. அரசுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு!

மதுரை, ஜூலை 11-

கரூர் கொடுந்துயர வழக்கில், 41 பேரின் குடும்பத்திற்கு தற்காலிக பணி மட்டுமே வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கில் நீதிமன்றமே இறுதி முடிவு எடுக்கும் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்க இடைக்கால தடைவிதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுக்கள் மீதான விசாரணை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வில் நடைபெற்றது. இருநீதிபதிகள் அமர்வு முன் நடைபெற்ற வழக்கு விசாரணையில், கரூர் கொடுந்துயர வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்ற கண்காணிப்பில் சிபிஐ நடத்தி வருவதாகவும், இந்நிலையில், 41 பேரின் குடும்பங்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கினால், சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாற வாய்ப்புள்ளதாக மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

மேலும், கும்பகோணம் மகாமகம் சம்பவம், ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு, தர்மபுரி பேருந்து எரிப்பு சம்பவங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், கரூர் கொடுந்துயரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தற்காலிக பணியாணை மட்டுமே வழங்க வேண்டும் என்றும், இந்த வழக்கில் இறுதி முடிவை நீதிமன்றமே எடுக்கும் என்றும் கூறி, வழக்கு விசாரணையை ஜூலை 21ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

இந்த வழக்கில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தையும் இணைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# ஜூலை 19ஆம் தேதி, நாடாளுமன்ற அனைத்துக்கட்சிக் கூட்டம் !

புதுடெல்லி, ஜூலை 11-

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 20ம் தேதி தொடங்கப்பட உள்ள நிலையில், 19ம் தேதி அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், வரும் 20ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 13 வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், வரும் 19ம் தேதி அனைத்து நாடாளுமன்ற கட்சிகளின் கூட்டத்துக்கு ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ள மசோதாக்கள், விவாதங்கள் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

அரசு தரப்பில் உயர் கல்வி ஆணையம் அமைக்கும் புதிய மசோதா, அமைச்சர்கள், முதலமைச்சர், பிரதமர் 30 நாட்கள் சிறை வைக்கப்பட்டால் தாமாக பதவி பறிக்கப்படும் மசோதா, புதிய பங்குச்சந்தை மசோதா, நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை, முக்கிய பிரச்சனைகளான அயோத்தி ராமர் கோயில் உண்டியல் நன்கொடை மோசடி, E20 எத்தனால் பெட்ரோல் விவகாரம், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வு, தொடர்ச்சியாக சேதமடைந்துவரும் தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பிரச்சனைகளை நாடாளுமன்றத்தில் எழுப்ப திட்டமிட்டுள்ளன.

## நெல்லை ‘சிப்காட்’டில் – தி.மு.க. ஆட்சியில் உறுதி செய்து அடிக்கல் நாட்டப்பட்ட

# ‘விக்ரம் சோலார்’ முதலீட்டுத் திட்டத்தை - ‘ரீல்ஸ் அரசு’ தனது புதிய திட்டம் போல் பொய் விளம்பரம்!

## சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனம்!

சென்னை, ஜூலை 11 -

நெல்லை கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில் முதலீடு உறுதி செய்து அடிக்கல் நாட்டப்பட்ட நிறுவனம் விக்ரம் சோலார்.

அதே நிறுவனத்தின் முதலீட்டு திட்டத்தையே த.வெ.க. அரசு புதிய முதலீடாக மக்கள் மத்தியில் விளம்பரப்படுத்தியுள்ளது. மேலும் ரூ.15,037 கோடி முதலீடு உடனே தமிழ்நாடு வருவதாக பொய்யான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். கடந்த 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டு நிதி கழகமான டி.எப்.சி. (DFC) மூலம் சுமார் 200 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி பெற்று, திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் உற்பத்தி ஆலை அமைக்க விக்ரம் சோலார் நிறுவனம் ஒப்பந்தம் செய்தது.

அதன்பிறகு, 2025 பிப். 5ம் தேதி, ரூ.3,800 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்ட டாடா குழுமத்தின் சோலார் உற்பத்தி ஆலையை அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

அதே நிகழ்வில் ரூ.3,125 கோடி முதலீட்டில் விக்ரம் சோலார் நிறுவனத்தின் தொழிற்சாலைக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. சுமார் 6,500 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், நேற்று சென்னை தலைமை செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில், திருநெல்வேலி கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் ரூ.15,037 கோடி முதலீட்டில் விக்ரம் சோலார் நிறுவனம் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் உற்பத்தி ஆலையை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக த.வெ.க. அரசு அறிவித்துள்ளது.

த.வெ.க. அரசின் இந்த அறிவிப்பை பார்த்தால், ரூ.15,037 கோடி முதலீடு உடனடியாக தமிழகம் வரப்போகிறது என்ற தோற்றம் உருவாகிறது. ஆனால், தொழில்துறை வட்டாரங்களில் அதற்கு மாறாக பேசப்படுகிறது. விக்ரம் சோலார் நிறுவனத்தின் முதலீடு ஒரே கட்டமாக நடைபெறவில்லை. பல ஆண்டுகளாக பல கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளதாக கூறப்படு கிறது.

அதன்படி, 2026ம் ஆண்டில் ரூ.800 கோடி, 2027ம் ஆண்டில் ரூ.1,200 கோடி, 2028ம் ஆண்டில் ரூ.1,300 கோடி, 2029ம் ஆண்டில் ரூ.1,071 கோடி என ஆரம்ப கட்டங்களில் மொத்தம் ரூ.4,371 கோடி அளவிலான முதலீடு மட்டுமே திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்பிறகு ஒவ்வொரு கட்ட முதலீடும் நிறுவனத்தின் பணப் புழக்கம், சந்தை மதிப்பு உள்ளிட்ட காரணிகளைப் பொறுத்தே முன்னேறும்.

அதாவது, ரூ.15,037 கோடி என்பது உடனடியாக வரவிருக்கும் முதலீடு அல்ல. நீண்டகால இலக்கு முதலீட்டு மதிப்பாக இருக்கலாம் என கூறப்படுகிறது. அதே போல், விக்ரம் சோலார் நிறுவனத்தின் சந்தை மதிப்பு சுமார் ரூ.7,000 கோடி இருக்கும் நிலையில், ரூ.15,037 கோடி முதலீடு எவ்வாறு சாத்தியமாகும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதுகுறித்து தொழில்துறை நிபுணர்கள் கூறுகையில், “ஒரு நிறுவனத்தின் சந்தை மதிப்பை விட அதிக மதிப்புள்ள திட்டங்களை மேற்கொள்வது இயலாதது. வங்கி கடன், வெளிநாட்டு முதலீடு, பங்குதாரர் முதலீடு, திட்ட நிதியுதவி, கூட்டாண்மை முதலீடு போன்ற பல்வேறு வழிகளில் நிறுவனங்கள் பெரிய முதலீடுகளை மேற்கொள்வது உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது.

எனினும், இந்த திட்டத்திற்கு நிதி எங்கிருந்து வர உள்ளது. எந்த ஆண்டில் எவ்வளவு முதலீடு செய்யப்படும். முழு திட்ட கால அட்டவணை என்ன என்பன குறித்து அரசு வெளிப்படையாக விளக்கம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது” என்றனர்.

## ஆசிரியர்கள் உணர்வுகளுக்கு எதிரான –

# ஆசிரியர் தேர்வு வாரிய அறிக்கையை திரும்பப் பெறுக!

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநிலப் பொதுச் செயலாளர் நா.சண்முகசுந்தரம் கோரிக்கை!

புதுக்கோட்டை, ஜூலை 11 -

ஆசிரியர்களின் உணர்வுகள் புண்படும் படி வெளியிட்டுள்ள ஆசிரியர் தேர்வு வாரிய அறிக்கையை திரும்பப் பெற வேண்டும் என தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் கோரிக்கை விடு த்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டை கல்வியில் சிறந்த தமிழ்நாடாக உயர்த்திக் காட்டிய தொடக்கக் கல்வி ஆசிரியர்களை உச்ச நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக ஆசிரியர் தகுதித் தேர்வு எழுத வேண்டிய நிலைக்கு லட்சக்கணக்கான ஆசிரியர்கள் தள்ளப்பட்டார்கள். 25 ஆண்டுகள் 30 ஆண்டுகள் கல்விப் பணியாற்றிய ஆசிரியர்கள் பணியை தொடர்வதற்கு ஏதோ நியமனத் தேர்வு எழுதுவது போல பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகும் நிலை ஆசிரியர்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்நிலையை மாற்றுவதற்கு தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் உடனடியாக தொடக்க கல்வி ஆசிரியர் இயக்கங்களின் தலைவர்களை அழைத்து பேசி நல்ல தீர்வினை ஏற்படுத்திட வேண்டும்.

முழுக்கல்வித் தகுதியோடு பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரின் பணியை பாதுகாத்திடும் வகையில் தனிச் சட்டம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்ற வேண்டும்.

பணியாற்றும் ஆசிரியர்களுக்காக நடைபெற்ற தகுதித் தேர்வில் பணியாற்றிய காலத்தின் அடிப்படையில் வெயிட்டேஜ் மதிப்பெண் வழங்கிட வேண்டும்.

பள்ளிப் பாடத்திட்டத்தில் இருந்து வினாக்கள் கேட்கப்பட வேண்டும்.

மேற்கு வங்காளம் போன்று தேர்ச்சி மதிப்பெண் குறைக்கப்பட்டு சீரான மதிப்பு நிர்ணயம் செய்திட வேண்டும்.

பத்தாம் வகுப்பு , பனிரெண்டாம் வகுப்பு, ஆசிரியர் பட்டய படிப்பு,கல்லூரி படிப்பில் உள்ளது போல் அனைத்து பிரிவினருக்கும் ஒரே தேர்ச்சி மதிப்பெண் இருப்பது போல் சிறப்பு ஆசிரியர் தகுதி தேர்விலும் அனைத்து பிரிவு ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான குறைந்த பட்ச தேர்ச்சி மதிப்பெண்ணை தகுதி மதிப்பெண்ணாக நிர்ணயிக்க வேண்டும்.

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அறிக்கை தமிழ்நாட்டின் ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் இருக்கும் நல்லுறவினை முற்றிலும் பாதிக்கக் கூடியதாக உள்ளது.எனவே

ஆசிரியர்களின் உணர்வுகள் புண்படும் படி வெளியிட்டுள்ள ஆசிரியர் தேர்வு வாரிய அறிக்கையை திரும்ப பெற வேண்டும்.

தேர்தல் வாக்குறுதியில் கூறிய படி தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டின் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு ஊதியக் குழுவில் இழைக்கப்பட்ட அநீதிகளையப்பட்டு ஊதிய முரண்பாடுகளை நீக்கி மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் 01.01.2006 முதல் மீண்டும் வழங்கிட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள ஊதிய அட்டவணையில் ஊதிய நிலை எண் 10 க்கான செல் வரிசை 45 உடன் முடிவடைந்து விட்ட நிலையில் வருடாந்திர ஊதிய உயர்வு பெற முடியாமல் இடைநிலை ஆசிரியர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே செல் வரிசையை 45லிருந்து 50 ஆக மாற்றி அமைத்து வெளியிட வேண்டும்.

தொடக்கக் கல்வித்துறையில் நிறைவேற்றப்படாமல் உள்ள அனைத்து கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றிட வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கருத்துகளைப் பகிர்வதற்காகப் பொதுமக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது தேவையற்றது!

# கழக GenZ செயற்பாட்டாளர் அன்பானந்தனுக்கு ஜாமீன்!

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு

தேவக்கோட்தடை, ஜூலை 11-

முதலமைச்சர் குறித்து இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விமர்சனம் செய்ததாகக் கூறி கழக Genz செயல்பாட்டாளர் அன்பானந்தம் காவல்துறையால் கைது செய்யப்பட்டார். மேலும் அவரை காவலில் வைக்கக் கோரி காவல் துறை தாக்கல் செய்த மனுவை நிராகரித்த தேன்கனிக்கோட்டை நீதிமன்றம், அவருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

தேன்கனிக்கோட்டை மாவட்ட முன்சீப் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற மாண்பமை நீதிபதி ஜே. தினேஷ் குமரன் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணையின் போது, காவல் துறை பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்திருந்தாலும், முதற்கட்டமாக தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 67 மட்டுமே இந்த வழக்கிற்குப் பொருந்துகிறது. இரு பிரிவினரிடையே பகைமையை வளர்த்தல் அல்லது பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்தல் போன்ற இதர குற்றச்சாட்டுகளுக் கான ஆதாரங்கள் இதில் இல்லை என்று நீதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும் வெறும் கருத்துக்களைப் பகிர்வதற்காகப் பொதுமக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது தேவையற்றது என்றும், சட்டம் ஒழுங்கு பாதிப்பு அல்லது வன்முறை தூண்டப்படாத பட்சத்தில் நீதிமன்றக் காவல் தேவையில்லை என்றும் குறிப்பிட்டு விசாரணையின் பெரும்பகுதி முடிந்துவிட்டதாலும், மேலும் காவல் விசாரணை தேவையில்லை என்பதாலும் அன்பானந்தத்திற்கு நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

## தி.மு.க.தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தலைமையில்

# தி.மு.க. தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## ஏழை – எளியோருக்கு நல உதவிகளுடன் அறுசுவை உணவு வழங்கும் விழா!

சென்னை, ஜூலை 11 -

தி.மு.க. தொண்டர் அணியின் சார்பில் காலத்தை வென்றவரும் அரசியல் ஞானியுமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆம் பிறந்த நாள் விழாவினையொட்டி, நாளை (12.07.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்கதம் ஒன்றியம், நீர்ப்பெயர் ஊராட்சியில் உள்ள “மேல்வசலை கிராமத்தில்” மாநிலத் தொண்டர் அணி மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் - மாநிலத் தொண்டர் அணித் தலைவர் காஞ்சி ஜி.சுகுமாரன் அவர்கள் முன்னிலையில்;

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன்.சிவக்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் இராமகிருஷ்ணன் ஆகியோர் நலத் திட்ட உதவிகள் வழங்கி அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

தொண்டர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் ப.கோமான், ஆவின் எம்.ஆறுமுகம், சுப.சரவணன், பி.எம்.முனிவேல், எஸ்.எம்.அன்பழகன், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, மாநிலப் பயிற்சியாளர் இ.குருதாஸ் மற்றும் மேல்வசலைக் கிளைக் கழகச் செயலாளர் மு.சண்முகம், கீழ்வசலைக் கிளைக் கழகச் செயலாளர்கள் கஜபதி, காத்தவராயன், நீலமங்கலம் கிளைக் கழகச் செயலாளர்கள் என். டி.ஜெயபால், சிவானந்தன், தாமரைச்செல்வன், நீர்ப் பெயர் கிளைக் கழகச் செயலாளர் வாசுதேவன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேல்வசலை மு.கண்ணப்பன், கி.இராமசாமி, மா.ஆறுமுகம், முன்னாள் கவுன்சிலர், ஆதிகேசவன், இரவிச்சந்திரன், முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம், கு.எத்திராஜ், மு.குமரன், கு.தேவதாஸ் செ. சிவக்குமார், இரஞ்சித் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.






பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 மாதாந்திர கூட்டம் மண்டல அலுவலகத்தில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி தலைமையில் செயல் பொறியாளர்கள் குமாரசாமி, அன்பரசன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தி.மு.க., ம.தி.மு.க., விடுதலை சிறுத்தை, இடதுசாரிகள், வலதுசாரிகள் கட்சிகளின் மாமன்ற உறுப்பினர்கள் அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கரூரில் – விஜய் பங்கேற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில்

# அனுமதி பெற்றுச் சென்ற செய்தியாளர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றம்!

## செய்தியாளர்கள் – காவல்துறை வாக்குவாதம்!

கரூர், ஜூலை 11 -

கரூரில் முதலமைச்சர் விஜய் பங்கேற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

கரூரில் விஜய் கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தில் நேர்ந்த கொடுந்துயரத்திற்கு பிறகு விஜய், நேற்று கரூர் சென்றார். கரூரில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் விஜய் பங்கேற்க உள்ளார். இதற்காக செய்தியாளர்களுக்கு முன்னதாக அனுமதி வழங்கப்பட்ட நிலையில், விஜய் நிகழ்ச்சிக்கு வருவதற்கு சிறிது நேரம் முன்பு செய்தியாளர்களை காவல்துறையினர் வெளியேற்ற வற்புறுத்தினர்.

அப்போது காவல்துறையினருடன் செய்தியாளர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போது, கரூர் எஸ்.பி ஹரி கிரண் பிரசாத் நேரில் வந்து செய்தியாளர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினார். ஜனநாயகத்தின் 4ஆம் தூணான ஊடகத்தையே ஒரு முதலமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் அனுமதிக்காததற்கு கண்டனம் எழுந்துள்ளது.